# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர், சென்னை – 600 032.

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)

*******

ஆணை எண்.001/பே/2021

நாள். 03.03.2021

திரு. ர.ஹேமநாதன்,
ராணிப்பேட்டை. – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
பனப்பாக்கம் பேரூராட்சி. – எதிர் மனுதாரர்.

ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி எண்.26/103, அண்ணா நகர், 3வது தெரு, நெமிலி வட்டம், என்ற முகவரியில் வசிக்கும் திரு ர. ஹேமநாதன் அவர்களின் 27.05.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.06.2020 அன்று பெறப்பட்டு 001/2021 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை.**

ராணிப்பேட்டை மாவடட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி, எண்.26/103, அண்ணா நகர், 3 வது தெரு, நெமிலி வட்டம் என்ற முகவரியில் வசிக்கும் திரு ர. ஹேமமாதன் என்பவர் பனப்பாக்கம் பேரூராட்சியில் அண்ணா நகர் குடியிருப்பு பகுதியின் எதிரில் கழிவு நீர் அனைத்தும் முதலில் சிறு குட்டை போன்று தேங்கியது எனவும் இப்போது அந்தக்குட்டை முழுவதும் கழிவு நீர் நிரம்பி ஒரு ஏரி

போன்று காட்சி அளிக்கின்றது. இதில் துர்நாற்றம் வீசுகின்றது எனவும், கொசுக்கள் அதிகமாக உற்பத்தி ஆகின்றது எனவும் பன்றிகள் அந்தக் குட்டையில் வசிக்கின்றது எனவும் இந்த குட்டையால் தங்கள் பகுதியில் சுகாதார கேடு விளைகின்றது என்றும் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டு அக்கழிவு நீர் குட்டையை அப்புறப்படுத்திட ஆணையிடக் கோரி மனுதாரர் முறையீடு செய்துள்ளார்.

2) பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரார் ஆகியோர் 25.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு வாக்கு மூலங்கள் பெறப்பட்டது. மனுதாரர் தமது வாக்குமூலத்தில் ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி, அண்ணா நகர் பகுதியில் உள்ள குட்டையில் தேங்கியுள்ள கழிவுநீரால் கொசுக்கள் பெருகியும், பன்றிகள் நடமாட்டம் அதிகரித்தும் உள்ளது. மேற்கண்ட கழிவு நீர் குட்டையை அகற்றிடக்கோரி, பேரூராட்சியில் பலமுறை புகார்கள் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட பகுதியில் உள்ள குட்டையில் தேங்கியுள்ள கழிவுநீரை குழாய்கள் பதித்து பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இல்லாத இடத்தில் வெளியேற்றம் செய்து, எங்களது பகுதியில் பொது சுகாதாரம் காத்திட, பேரூராட்சி அலுவலர்களுக்கு ஆணையிடுமாறு தெரிவித்துள்ளார்.

3) பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில், மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள குட்டையில் தேங்கியுள்ள கழிவு நீரை சுமார் 5 லட்சம் மதிப்பீட்டில் குழாய்களை பதித்து மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் வெளியேற்றுவதற்கு, உதவி செயற்பொறியாளர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோருடன் கலந்தாலோசித்து, தேவையான நடவடிக்களை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் செயல் அலுவலர் தமது 22.02.2021 நாளிட்டட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ள கழிவுநீர் தேங்கும் இடம் புல எண். 47ல் உள்ள 95.5 ஏர்ஸ் பரப்பளவு கொண்ட மயானப்புறம்போக்கு பகுதியாகும். இந்த இடத்திற்கும் அண்ணா நகர் குடியிருப்பு பகுதிக்கும் இடையில் ஒச்சேரி முதல் அரக்கோணம் வரை செல்லும் 40 அடி அகல மாநில நெடுஞ்சாலை செல்கிறது. குடியிருப்பு பகுதிக்கும் அவ்விடத்திற்கும் சுமார் 200 மீ. தொலைவு உள்ளது. புதியதாக அவ்விடத்தில் கழிவு நீர் வெளியேற்றப்படவில்லை. அப்பகுதியில்

வெளியேறும் கழிவு நீருக்கு அவ்விடம் Disposal Point ஆக காலங்காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. அப்பகுதியின் அருகில் உள்ள குப்பைகளை அவ்வப்போது ஜேசிபி மூலம் சுத்தம் செய்யப்பட்டு வருகிறது. பனப்பாக்கம் பேரூராட்சி பகுதி நாளது தேதியில் சுமார் 12500 மக்கள் தொகை கொண்ட பகுதியாக உள்ளது. இப்பகுதியின் 53 தெருக்களில் மழைநீர் மற்றும் கழிவு நீர் வெளியேறும் Disposal point என 5 இடங்கள் உள்ளது. இந்த 5 இடங்களும் காலங்காலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பேரூராட்சி பகுதியில் பன்றிகள் சுற்றித்திரிவதை தடுக்க பன்றி வளர்க்கும் நபர்களுக்கு 22.01.2021 ஆம் தேதி அறிவிப்பு கடிதம் வழங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பனப்பாக்கம் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகள் முழுவதும் 15 தினங்களுக்கு ஒரு முறை புகைப்போக்கி மூலம் கொசுவினை கட்டுப்படுத்திட புகைமருந்து அடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து, டெங்கு தடுப்பு நடவடிக்கை தொடர்பாக தெருக்கள், வீடுகள் மற்றும் இதர பகுதிகளில் தினசரி இரண்டு குழுக்களாக பிரிந்து கொசுக்கள் உருவாவதனை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அழிக்கவும், அவற்றை கட்டுப்படுத்திட டெங்கு மஸ்தூர் என 10 நபர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவின்படி நியமனம் செய்து கொசு உற்பத்தியினை கட்டுப்படுத்திட டெங்கு கொசு ஒழிப்பு நடவடிக்கை எடுத்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்பொழுது 15–வது நிதிக்குழு மான்யத்தின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, திரவக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவு நீர் வெளியேறும் இடத்தில் சுத்திகரிப்பு செய்து மறுசுழற்சி முறையினை ஏற்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பணியினை சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

4) மேற்படி செயல் அலுவலரது வாக்குமூலம் மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள்பரிசீலிக்கப்பட்டன. மனுதாரரின் வாக்கு மூலம் மற்றும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன. இந்நேர்வு சம்மந்தமான அனைத்து ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் பரிசீலிக்கப்பட்டு, செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்தபடி, குட்டையில் தேங்கியுள்ள கழிவு நீரை சுமார் 5 லட்சம் மதிப்பீட்டில் குழாய்கள் பதித்து மக்கள் நடமாட்டம் இல்லாத இடத்தில் வெளியேற்றுவதற்கு, உதவி செயற்பொறியாளர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோருடன் கலந்தாலோசித்து, தேவையான நடவடிக்கைகளை பொதுமக்களின் நலன் கருதி விரைவாக எடுத்திட பனப்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள், 3. ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

/ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1) திரு. ர.ஹேமநாதன்,
த/பெ. வி.எம். ரங்கராதன்,
26/103, அண்ணா நகர், 3வது தெரு,
நெமிலி வட்டம், பனப்பாக்கம் பேரூராட்சி,ஃ
ராணிப்பேட்டை மாவட்டம் – 631 052.

2) செயல் அலுவலர்,
பனப்பாக்கம் பேரூராட்சி,
ராணிப்பேட்டை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி இயக்குநரகம்,
வேலூர் மாவட்டம்.

4) முறைமன்ற நடுவரின் நேர்முக உதவியாளர்.